TNTP130007802026

Presented on : 18-04-2026
Registered on : 21-04-2026
Decided on : 11-06-2026
Duration : 0 years, 1 months, 23 days

<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், துறையூர்</u>

<u>முன்னிலை</u> : திரு.ரா.சுரேஷ்குமார் B.A., L.L.B (Hons)., L.L.M.,
நீதித்துறை நடுவர், முசிறி
நீதித்துறை நடுவர் (முழு கூடுதல் பொறுப்பு),
துறையூர்.

2026 ம் வருடம் ஜுன் மாதம் 11 ம் தேதி வியாழக்கிழமை

**<u>Crl.MP.No.445/2026</u>**

.....

அப்துல் அஜிஸ் (வயது 23/26),
த/பெ.தஸ்தஹீர்,
நெ.168/18, முத்துநகர்,
துறையூர் டவுன் & தாலுக்கா,
திருச்சி மாவட்டம். ... மனுதாரர்

/Vs/

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
துறையூர் காவல் நிலையம்,
குற்ற எண்.316/2024.
U/s.309(4), 311, 3(5) of BNS ....எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது இறுதியாக 11.06.2026 ல் விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.கார்த்திகேயன், அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளையும், வழக்கு சங்கதிகளையும் பரிசீலிக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.11 19:24:41 +0530

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/1வது எதிரி ஏற்கனவே மாண்புமிகு இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் S.C.No.179/2025 என்ற வழக்கில் எதிரி குற்றவாளி என்று கூறி கடந்த 10.02.2026ம் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், அப்பொழுது நீதிமன்ற உத்தரவின் படி எதிரி தனது வாகனத்திற்குரிய ஆர்.சி. புத்தகத்தின் அசலை வழக்கிற்காக நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளதாகவும், எனவே தனது வாகனத்திற்காக அசல் ஆர்.சி. புத்தகத்தினை நிரந்தரமாக திரும்ப ஒப்படைக்கக்கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2. அரசு தரப்பில் மனுதாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்றும், மேற்கண்ட வாகனத்தின் அசல் பதிவுச்சான்றிதழை மனுதாரர் வசம் ஒப்படைத்தால் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு தேவைப்படும்பட்சத்தில் ஆஜர் செய்யமாட்டார் என்பதாலும் விற்றுவிடக்கூடும் என்பதாலும், வழக்கு சொத்தின் R.C புத்தகத்தை மனுதாருக்கு அசல் பதிவுச்சான்றிதழை வழங்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. **<u>தீர்வு</u>** :

மனு அனுமதிக்கத்தக்கதா?

4. இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் இந்த வழக்கில் 6வது எதிரி என்றும், இந்த எதிரி மீதான S.C.No.179/2025 வழக்கானது மாண்புமிகு இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளியில் கடந்த 10.02.2026ம் தேதி இந்த எதிரியை குற்றவாளி என்று முடிவு செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தின் அசல் பதிவு சான்றிதழை இந்நீதிமன்றத்தில் வைத்திருப்பதால் எந்த பலனும் கிடைக்கப்போவதில்லை என்று முடிவு செய்து மேற்படி மனுதாரர் R.C புத்தகம் கோரி தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்படுகிறது.

5. முடிவாக மனு அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.11 19:24:52 +0530

பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 11–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.06.11 19:24:59 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.